[1974 சனவரி 23

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி, பொதுத் துறையைக் கலந்தாலோசித்து, இத்திட்டம் குறித்த விவரங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. அதற்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட்ட பின்னர்தான் இத்திட்டம் குறித்த விவரங்களை எடுத்துச்சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 93, 94, 95, 96 ஆகிய எண்கள் உள்ள கேள்விகள் பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனைகள்

*97 **வினா—திரு. நா. வெ. குருசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டியில் ஒன்றியத்தால் நடத்தப்படும் மருத்துவ மனையை அரசு மருத்துவ மனையாக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஆண்டிப்பட்டி ஒன்றிய மருத்துவ மனையை அரசு மருத்துவ மனையாக்க, 1973-74-ஆம் ஆண்டிற்கான திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. நடைமுறையில் ஏற்படுகிற தாமதம் விரைவில் நீக்கப்படும்.

திரு. கே. என். குமாரசாமி: ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கக்கூடிய இந்த மருத்துவ மனையை அரசு மருத்துவ மனையாக எடுத்துக் கொள்ள ஊராட்சி ஒன்றியத்தில் அதற்கு ஈட்டுப்பணம் கொடுக்கத் தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். அதை விரைவில் அரசு எடுத்துக்கொள்ள முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஒவ்வொரு மருந்தகத்தையும் அரசு எடுத்துக்கொள்ளுகிறபோது, அந்த மருந்தகம் அடிப்படை வசதிகளைப் பெற்றுள்ளதாக இருக்கவேண்டும். நடைமுறையில் ஏற்படுகிற செலவைத்தான் அரசு ஏற்றுக் கொள்ளுகிறது. அடிப்படை வசதிகளை நிறைவு செய்வதற்காக அங்கங்கே பத்தாயிரம், இருபதாயிரம் ரூபாய் ஒன்றியத்திலிருந்து தரவேண்டும் என்று கேட்கப்படுகிறது. அந்த நிதி கொடுத்தவுடன்

1974 சனவரி 23]

அதுபோன்ற 15, 16 மருந்தகங்களை சேர்ந்தாற்போல் எடுத்துக் கொள்ள அரசு இசைந்திருக்கிறது. எடுத்துக்கொள்வதற்கான நடைமுறை இப்பொழுது ஆய்வில் இருக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: நமது மாநிலத்தில் பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்திலுள்ள அநேக டிஸ்பென்சரிகளில் டாக்டர் பற்றாக்குறை இருக்கிறது. இம்மாதிரி டாக்டர்கள் பற்றாக்குறை இருப்பதினால் அநேக டிஸ்பென்சரிகள் சரியாக நடப்பது கிடையாது. இப்பொழுது எம்.பி., பி.எஸ். டாக்டர்கள் அதிகமாக இருப்பதன் காரணத்தினால் அம்மாதிரி டிஸ்பென்சரிகளில் எம்.பி., பி.எஸ். டாக்டர்களைப் போடுவதற்கு அரசாங்கம் ஒத்துக் கொள்ளுமா? அந்தத் திட்டத்தைப் பற்றி கவனிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, எல்.ஐ.எம். டாக்டர்களை ஏற்கனவே நியமித்திருக்கிற ஒன்றிய மருந்தகங்களில் அவர்களைக் கொண்டு நடத்தும்பொழுது செலவு சிக்கனமாக ஆகிறது. எம்.பி., பி.எஸ். டாக்டர்களைப் போட வேண்டுமென்றால் செலவு அதிகமாக ஆகும். அரசாங்கம் எடுத்து நடத்தவேண்டுமென்றால் ஒன்றியம் எடுத்து நடத்தும்பொழுது ஏற்படும் செலவை விட, அதிக செலவு ஆகிறது. ஒன்றிய மருந்தகங்கள் ரூ. 15,000 செலவில் நடந்துகொண்டிருக்கிறது. அரசாங்கம் எடுத்து நடத்தவேண்டுமென்றால், அலுவலர்களை நியமிக்கவேண்டியிருக்கிறது. ரூ. 35,000 செலவாகிறது. ஒன்றிய மருந்தகங்களுக்கு ஏறத்தாழ ரூ. 8,000 முதல் ரூ. 10,000 வரையில் ஆண்டு ஒன்றுக்கு வழங்கப்படுகிறது. ஒன்றிய மருந்தகங்களை அரசாங்கம் ஏற்றுக்கொண்டால், இந்த சிக்கல் ஏற்படுவது ஒரு பக்கம் இருக்க, ஒன்றியத்தின் மேற்பார்வையில் நடக்கும்பொழுது சில வசதிகள், பொது மக்களோடு தொடர்புகள் ஏற்படுகின்றன. அரசாங்கமே எடுத்துக்கொள்வது என்றால், அரசாங்க அதிகாரிகள் போய்ப் பார்த்தால் தான் பார்வையிட முடியும். மக்களுடைய தேவைகளை நிறைவு செய்வதற்கு உள்ளாட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம் அந்தப் பொறுப்புகளை ஏற்று நடத்தவேண்டும் என்ற அடிப்படையில் இவற்றைப் பற்றி தீர்மானிக்கும் பொறுப்பும் அவர்களுக்குத் தான் இருக்கிறது.

திரு. ஏ. எம். இராஜா: மருந்தகங்களை அரசு எடுத்துக் கொள்ளும் திட்டம் இந்திய உப கண்டத்திலேயே நம்முடைய மாநிலத்தில் தான் செயல்படுகிறது என்று நான் கருதுகிறேன். அதே மாதிரி அரசு எடுத்துக்கொள்கிற மருந்தகங்களுக்கு மத்திய அரசு ஏதாவது மாநில அரசுக்கு உதவி செய்கின்றதா மருந்தகங்கள் நடத்துவதற்கு? இல்லையென்றால், மத்திய அரசு இதற்காக நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று நம்முடைய அரசு போராடிப் பெறுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கிராம மக்களுக்கு சிறந்த மருத்துவத்தை வழங்கவேண்டும் என்ற பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களுக்கு, அவர்களுக்கே ஆட்சி உரிமை இருக்கிற காரணத்தினால் அவர்களுக்கே இருக்கிறது. மாநில அரசுக்கும் இருக்கிறது. இந்தத் திட்டங்களை விரிவுபடுத்தி நடத்தவேண்டும் என்று சொல்லிவருகிற பொறுப்பு மத்திய சர்க்காருக்கு இருக்கிறது. மத்திய அரசு ஆலோசனை வழங்குகிறதே தவிர, நிதி வழங்குவதில்லை. மாநில அரசு தனது திட்டங்களுக்கு குறிப்பிட்ட அளவுக்கு நிதி வழங்குகிறது. ஒன்றிய மருந்தகங்களை அரசு ஏற்றுக்கொள்வதோ, அல்லது புதிய மருந்தகங்களை ஏற்படுத்த வேண்டுமென்பதோ அதை ஒன்றியம் தான் செய்யவேண்டும்.

திரு. நா. வெ. குருசாமி: ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் கட்டட வசதி இருக்கிறது. நிர்வாகச் செலவில் அதிகமாக அரசு ஈடுபாடு கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஆகவே, மருந்தகத்தை உடனே அரசு மேற்கொண்டால் அங்குள்ள பொது மக்கள் பயன் அடைவார்கள். ஆகவே, அதை அரசு செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: எந்த ஒரு பிராந்தியத்தில் இருந்தாலும் மருந்தகங்களுக்கு ஒரு ஆண்டுக்கு குறைந்தது ரூ. 20,000 அளவுக்கு ஒன்றியம் செலவிட்டுக்கொண்டு தான் நடத்த முடியும். அரசாங்கம் எடுத்தவுடன் ஒரு ஆண்டுக்கு ரூ. 30,000 முதல் ரூ. 40,000 வரையில் செலவு ஆகிறது. அதற்கு முன் பணம் ரூ. 10,000, 15,000 'ஃபார் தி அதர் அரேஞ்மெண்ட்ஸ்' அதற்கு வேண்டிய சில ஏற்பாடுகள், திருத்தங்கள் அல்லது பழுதுபார்த்தல் இவைகளுக்கு ஆகிற செலவை முன்பணமாகக் கட்டவேண்டு மென்று நாங்கள் ஒன்றியத்தைக் கேட்கிறோம். அந்தத் தொகையை உடனே கட்டுவதற்கு அங்கத்தினர் அவர்கள் முயற்சிப்பார்களே யானால் பயன் தரும்.

1974 சனவரி 23]

***98 வினா—திரு. கோ. இளங்கோவன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பூதலூர் பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தில் இருக்கும் செங்கிப்பட்டி மருந்தகத்தை அரசின் நேரடி நிர்வாகத்தில் கொண்டுவரும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையி லுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தற்போது இல்லை.

பாதாள சாக்கடை அமைப்புத் திட்டங்கள்

***99 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972-73 ஆம் ஆண்டில் எந்தெந்த நகராட்சி மன்றங்கள் பாதாள சாக்கடை அமைப்புத் திட்டங்களுக்கென அரசிடம் கடன் கோரியுள்ளன ?

(இ) எந்தெந்த நகராட்சி மன்றங்களுக்குக் கடன் அனுமதிக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) 8 நகராட்சி மன்றங்கள் 1972-73 ஆம் ஆண்டில் பாதாள சாக்கடை அமைப்புத் திட்டங்களுக்கென அரசிடம் கடன் கேட்டன. அரசு இந்த 8 நகராட்சி மன்றங்களுக்கும் 1972-73 ஆம் ஆண்டிற்கு கடன் தொகை வழங்கியுள்ளது. நகராட்சி மன்றங்களின் பெயர்களும் கடன் வழங்கப்பட்ட தொகையும் பின்வருமாறு :—

	ரூபாய்.
1. பெரியகுளம்	1,85,000
2. மன்னார்குடி	17,800
3. திருநெல்வேலி	10,84,000
4. கும்பகோணம்	1,30,600
5. காஞ்சீபுரம்	6,61,000
6. கோயம்புத்தூர்	3,62,000
7. திருச்சி	6,87,000
8. திருவொற்றியூர்	3,51,000